

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர் கூட்டத்தில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் சண்.இராமநாதனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க தஞ்சையில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.எல்.ஏ ஆர்.ரெங்கசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்ட நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி, மணிமாறன், மாநில நிர்வாகிகள் எஸ்.ஜித்து, அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வறுமையும், கெட்ட போர்களும் அகன்று

# மனிதம் மட்டுமே ஆட்சி செய்யும் புத்துலகைப் படைப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தியில் உறுதி!

சென்னை, ஏப். 6-

**“வறுமையும் கெட்ட போர்களும் அகன்று, மனிதம் மட்டுமே எங்கும் ஆட்சி செய்யும் புத்துலகைப் படைப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



கருணையே வடிவான இயேசு கிறிஸ்துவின் மனிதநேயக் கருத்தியல்களை வாழ்வியல் நெறிகளாகக் கொண்டு நடக்கும் கிறிஸ்தவ சகோதரர்கள் அனைவருக்கும் ஈஸ்டர் எனும் உயிர்ப்பு ஞாயிறு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் வன்முறைகளும், வெறுப்பும், வறுமையும், கெட்ட போர்களும் அகன்று, மனிதம் மட்டுமே எங்கும் ஆட்சி செய்யும் புத்துலகைப் படைக்க இந்நாளில் உறுதியேற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் - ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

புதுக்கோட்டை. ஏப்6

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் சிவ. வீ. மெய்யநாதன் அவர்களை ஆதரித்து மதச்சார் பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் ஆலங்குடி ஆர் கே மஹாலில் மாபெரும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கனிம வளத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி வரவேற்றார். கூட்டத்தில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சிவ. வீ. மெய்யநாதன் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 95 சதவீதம் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆலங்குடியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தோப்புக் கொள்ளையில்தொகுதிக்கான சிறு விளையாட்டு மைதானம், கொத்தக் கோட்டையில் ரூ. 13 கோடியில் துணை மின் நிலையம், சிட்கோ வேலை வாய்ப்புத் திட்டம், வேலை நடைபெற்றுவருகிறது. ஆலங்குடியில் போட்டித் தேர்வு மையம் ரூ.1.65 கோடியில் அறிவுசார் மையம், திருவரங்குளம் யூனியன் புதிய அலுவலகம், 2. 0 திட்டத்தில் காவிரி குன்டாறு வைகை திட்டத்திற்கு அதிக நிதி பெற்றுத் தரப்படும் கீரமங்கலம் தனி தாலுகா அலுவலகம் பெற்றுத்தரப்படும், தைல மரம் டிஎன். பி.எல். திட்டத்தால் அழிக்க முடியாத சூழல், ஆலங்குடியில் பாலிடெக்னிக், ஐடிஐ அமைக்கப்படும் என துணை முதலமைச்சர் உறுதி தந்துள்ளார்

கள். புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி சாலை ரூ. 200 கோடி செலவில் நான்கு வழிச்சாலை, 48 ஊராட்சி கொண்ட திருவரங்குளம் ஊராட்சியில் எண்ணற்ற திட்டங்கள், அதிமுக எடப்பாடி பழனிசாமி ஆட்சி காலத்தில் கொல்லையடித்த ஆட்சி தான் நடந்தது. தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்குதாயாக தந்தையாக இருந்துவருகிறார். காலை உணவுத்திட்டம், 2.0 திட்டத்தில் 5 ஆம் வகுப்புவரை இருந்ததை தற்போது 8 வகுப்பு வரை காலை உணவு திட்டம் கொண்டுவந்தவர் முதலைமைச்சர். பிஜேபி ஆட்சி அதானி அம்பானி கையில் உள்ளது.

இப்படி 95 சதவீதம் பணிகள் நிறைவடை ந்துள்ளது எஞ்சிய 5 சதவீதம் பணிகளை வரும் காலத்தில் செய்து முடிக்கப்படும். ஆலங்குடி தொகுதியில் தண்ணிரைவு பெற்ற தொகுதியாக மாற்றிய மைக்கப்படும்.

செய்த சாதனைகளை எடுத்துக்கூறினார். கூட்டத்தில் முன்னாள்.சட்டமன்ற உறுப்பினர்கள் த. புஸ்பராஜ், ராம.சுப்புராம், கழக. விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகன், காங்கிரஸ் கட்சி தெற்கு மாவட்ட தலைவர் மணிகண்டன், முன்னாள் மாவட்ட தலைவர் தமிழ்ச்செல்வன், ஆசிரியர் (ஓய்வு), கம்யூனிஸ்ட் கட்சி செங்கோடன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, செல்வராஜ், சங்கர் சிபிஎம், தேமுதிக ஒன்றிய செயலாளர் சசிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அரு.வடிவேல், கே. எஸ்.ரவி, எஸ்டிபிஐ ஜிலாவுதீன், விசிக மாவட்ட செயலாளர் அம்பேத்வழவன், தேமுதிக நகரச்செயலாளர் செல்வம், அல்லா பிச்சை, ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.வி.சிவக்குமார், பொதுக்குழு. உறுப்பினர்கள் ஆர்.வி.செல்வம், கே. எம்.சுப்பிரமணியன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பள்ளத்துவிடுதி நாராயணன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், எஸ்.எம். குமரேசன், கருணாகரன், இரா.தமிழ்ராசு, கே.வி.சுப்பையா, ஆர்ட்டிஸ்ட் முருகேசன், ராஜ பெரியண்ணன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

அது சமயம் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் மாவட்ட, மாநில நிர்வாகிகள் முன்னிலையிலும் திருவரங்குளம் மேற்கு,தெற்கு, கிழக்கு, ஒன்றிய கழக நிர்வாகிகளும் ஆலங்குடி பேரூர், கீரமங்கலம் பேரூர் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். முடிவில் பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிகுமார் நன்றி கூறினார். நிகழ்வில் கழக முன்னோடிகளும் கூட்டணி கட்சி நண்பர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

### காட்டூர் பிலோமினாள் ஆலயத்தில் ஈஸ்டர் வாழ்த்து தெரிவித்து

# அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாக்கு சேகரிப்பு!

*திருச்சி, ஏப்.6-*

திருவெறும்பூர் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளரும், அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, காட்டூர் பகுதியில் அமைந்துள்ள புனித பிலோமினாள் ஆலயத்தில் நடைபெற்ற இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா (Easter) ஆலய வழிபாட்டிற்கு வந்த மக்களிடம், அமைச்சர் தனது ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த மக்களிடம் வரவிருக்கும் தேர்தலில் ‘உதய சூரியன்’ சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.



உயிர்த்த ஆண்டவரின் திருஉருவச் சிலையை வணங்கி தனது பணியை தொடர்ந்தார்.

இந்நிகழ்வின் போது மு. மதிவாணன் (மாநகரக் கழகச் செயலாளர்) நீலமேகம் (பகுதி கழகச் செயலாளர்) மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர் செந்தில்,கழக நிர்வாகிகள் ஜான், சாந்தகுமாரி பொன் செல்லையா வட்டக் கழகச் செயலாளர்கள்கார்த்தி, முருகானந்தம், விஸ்வநாதன் சுரேஷ் ஆனந்த் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### குத்தாலம் பி.கல்யாணம் சிறப்புரை!

# பூம்புகார் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. ஏற்புரை!

*மயிலாடுதுறை. மார்ச் 6-*

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் செம்பனார்கோயில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக துணைச் செயாளர் மு.ஞானவேலன் தலைமை தாங்கினார். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன் வரவேற்றார். கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் காங்கிரஸ் எஸ்.பானுசேகர், மதிமுக சி.கொளஞ்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பி.ஆர்.அன்பரசன், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பி.சீனிவாசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அ.சீனிவாசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நூருல்லாஹ், தே.மு.தி.க சொ.பாலு, மனிதநேய மக்கள் கட்சி முஹம்மஹாலிது, முகமத ருபீஸ், திராவிட கழகம் கு. இளமாறன், மாவீரன் வன்னியர் சங்கம் வி.ஜி.கே. மணி, இந்திய தேசிய லீக் ஏ.ஷாஜகான், எம்.சர்புதீன், மக்கள் நீதி மையம் எஸ்.மனோகர், விவசாய தொழிலாளர் கட்சி ஆர். சேகர், மூவேந்தர் முன்னேற்ற கழகம் முனிபாலன், முக்குலத்தோர் புலிப் படை செல்லைமுரளி, வீர முத்தரையர் முன்னேற்ற கழகம் கே. பன்னீர்செல்வம், எஸ்.டி.பி.ஐ. முகமது ராபி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அமிர்தவிஜயகுமார், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ். கே.முத்துராஜா, மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர்கள் நந்தினிஸ்ரீதர், கமலஜோதிதேவேந்திரன், கே.மகேந்திரன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செலயாளர் குத்தாலம் க. அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பிஎம்ஸ்ரீதர், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.எல்.விஜயபாலன், எம்.எம்.சித்திக் ஆகியோர் சிறப்புரையாறிறினார்கள். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு வாக்கு கேட்டு ஏற்புரையாற்றினார். கூட்டத்தில் கழக பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், உறுப்பினாகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் நன்றி கூறினார்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, புலியகுளம் பகுதி, வடக்கு அம்மன் குளம், எரிமேடு, ராஜீவ் நகர், கலைவாணி நகர் உள்ளிட்ட பகுதிகளில் கழக வேட்பாளர், வி.செந்தில் பாலாஜி வீதி, வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், பகுதி கழக பொறுப்பாளர் தேவசீலன், மாமன்ற உறுப்பினர் நவீன் முருகன் உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லப்பாண்டியனை அறிமுகம் செய்து புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் துணை மேயர் அஞ்சுகம் பூபதி, த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், அரு. வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, சு.சண்முகம், கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், மு.பி.ம.சத்தியசீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், எம்.கோவிந்தராஜன், வை. விஜயக்குமார், முகம்மது ரிஷா, டாக்டர் செ. குறிஞ்சிவாணன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.